MCOP.NO. 36/2022
Date : 22.08.2025
Witness Name & Rank – வெள்ளையம்மாள் - PW1

**சாட்சி அழைக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்**

1. எப்போது விபத்து நடந்தது என்றால் எட்டாவது மாதம் 2022ம் ஆண்டு விபத்து நடந்தது. மேற்படி விபத்து சமயத்தில் நான் இருசக்கர வாகனத்தில் பயணம் செய்தேன் என்றால் சரிதான். அந்த இரு சக்கர வாகனத்தில் எத்தனை பேர் பயணம் செய்தோம் என்றால் நான் எனது அக்கா மகள் மற்றும் இன்னொரு பெண்மணி என மூன்று பேர் சென்றோம்மோட்டார் வாகன விதிகளுக்கு முரணாக இரண்டு பேர் செல்லும் இருசக்கர வாகனத்தில் மூன்று பேர் சென்று விபத்துக்குள்ளானதால் எங்களது கவனக்குறைவால் தான் மேற்கூறிய விபத்து நடந்தது என்றால் சரியல்ல. மேற்படி நான் சென்ற இருசக்கர வாகனத்தை யார் ஓட்டிச் சென்றது என்றால் ரத்னா ஓட்டிச்சென்றார்.
2. அவரை நான் இந்த வழக்கில் நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி ரத்னாவிற்கு இருசக்கர வாகனத்தை ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் விவசாயக் கூலி வேலை செய்து வருகிறேன். ஆனால் நான் தாக்கல் செய்துள்ள மனுவில் நான் முதல் எதிர்மனுதாரிடம் பணியாற்றி வருவதாக சொல்லி உள்ளேன் எனவே அதன் அடிப்படையிலேயே இந்த மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எங்களது கவனக்குறைவால் மேற்குறிய விபத்து நடந்துள்ளதால் இரண்டாவது எதிர்மனுதாரர் எந்த வகையிலும் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல எனவே இரண்டாவது எதிர்மனுதாரருக்கு எதிரான இந்த மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. மேற்குரிய விபத்தானது வேறு வாகனம் எதுவும் எதிரிலோ அல்லது பின்னாலோ வந்து இடிக்க வில்லை நான் சென்ற வாகனம் பஞ்சர் ஆகி தான் விபத்து ஆனது என்றால் சரிதான். நாங்கள் மூன்று பேர் சென்றதால் தான் எங்களது கனத்தை தாங்க முடியாமல் டயர் வெடித்து விட்டது எனவே எங்களது கவனக்குறைவால் தான் விபத்து நடந்துள்ளது

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTI210005452022/truecopy/order-1.pdf

என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/-)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.

www.ecourtsindia.com
This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTI210005452022/truecopy/order-1.pdf